முருகப்பெருமான் துணை

**மகான் சொரூபானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

05.09.2021, ஞாயிற்றுக்கிழமை

1. அருள்பலம் கொண்ட குருவாக
அன்னதான வள்ளலாக வந்தநல்
அருள்மிக்க ஆறுமுக அரங்கனே
அகிலமதில் உன்பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குறைவிலா பிலவ யாளிதிங்கள்
இருபான்திகதி கதிரோன் வாரம்
(பிலவ வருடம் ஆவணி மாதம் 20ம் நாள், 05.09.2021, ஞாயிற்றுக்கிழமை)
இயம்புவேன் சொரூபானந்தர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்மாந்தர்கள் எனும் மாற்றம்
ஞானவழி கொண்டு பேருலகில்
நடத்திட அவதாரம்புரிந்த அரங்கனே
4. அரங்கனே உன் சக்திநிலை
அகிலத்தார் அறிந்து அனுக
வரங்களாக மாற்றம் கூடி
வாழும்காலமே மக்கள் ஞானிகள்ஆவர்
5. ஆவரே தவதரும பலத்தின்
அனைத்து சூட்சுமம் உணர்ந்து
அவனியில் தெளிவு கண்டு
அனைவரும் பெரும்பேறு காண்பர்
6. காண்கவே மாயை அல்லல்
களவு வஞ்சம் பிணி யாவும்விலகி
உண்மை ஆன்மீகம் எனும்தூய
உயர்நெறி சன்மார்க்கம் பரவ
7. பரவவே உலக மக்களிடை
பக்குவம் தயவுநிலை கூடி
தரணியே ஞானவான்களெனும்
தன்னார்வ தொண்டுள்ளம் பெருகி
8. பெருகியே எங்கும் எதிலும்
பிரணவ சக்தி துணைபட
முருகப் பெருமான் வெளிப்பட
முழுமையான ஞானம் பெற்றமக்கள்

9. மக்கள் தலைமைக்கு வந்திட
மண்ணுலகம் பாதுகாப்பு தரும்
ஆக்கமான ஞான ஆட்சிகண்டு
அமைதியும் வளமும் காணும்

10. காணவே காலம் கடத்திடா
கலியுக அவதார ஞானியாம்
ஞான தேசிகன் வழிகாட்டலை
நம்பிக்கை வைத்துத் தொடர

11. தொடரவே கலியின் அவலம்
தொலைந்து எல்லா திக்கிலும்
சுடரான சரவணசோதி வழிபாடு
சிறந்துமே ஞானஆட்சி மலரும்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–